# INTERNATONAL INDIAN SCHOOL – DAMMAM

## SUMMATIVE ASSESSMENT –II ( 2015-16 )

## TAMIL - CLASS –VII

தமிழ் - ஏழாம் வகுப்பு

**Time :- 3 Hours** **Maximum Marks :- 90**

நேரம் :- 3 மணி மதிப்பெண்கள் :- 90

---

## பகுதி- 1

**அ. கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.** 5 x 2 = 10

சூரியக் குடும்பத்தில் உயிர்க்கோள் பூமி. பூமியில் பல்வகை உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் உள்ளது. நிலம் , நீர் , நெருப்பு , காற்று , ஆகாயம் என்னும் அவற்றின் கூட்டு அமைப்பில்தான் உயிர்கள் தோன்றி வாழ்கின்றன. நாம் பூமியின் இத்தகைய அமைப்பைப் 'பஞ்ச பூதம்' எனக் குறிப்பிடுகிறோம். உயிர்களின் வாழ்வுக்கு இன்றியமையாதது உணவு. எனினும் சுவாசித்தல் இல்லாமல் உயிர்கள் வாழ முடியாது. சுவாசித்தலுக்கு தூய காற்று தேவை. ஆனால் இன்று காற்று , அளவுக்கு அதிகமாக மாசு அடைந்து வருகிறது. தொழில்வளத்தால் பெருகிய தொழிற்சாலைப் புகையாலும் , வாகனப் போக்குவரத்தால் வெளியாகும் புகையாலும் காற்று மிகுதியாக மாசுபடுகிறது. மாசுபட்ட காற்றில் கலந்துள்ள கரிய மில வாயுவைத் தாவர வகைகள் எடுத்துக்கொண்டு , பகலில் ஒளிச்சேர்க்கை மூலம் நமக்குத் தேவையான உயிர்வளியை வெளிவிடுகிறது. ஆகவேதான் அதிகமான மரங்களை வளர்க்க வேண்டும் என்றும் காடுகளை அழிக்கக்கூடாது என்றும் பிரச்சாரம் செய்கிறார்கள். காட்டு வளத்தைக் காப்பதனால் மட்டுமே நாம் பல நன்மைகளைப் பெறலாம். காடுகள் காற்றைத் தூய்மைப்படுத்துகின்றன. மழை பெய்யவும் உதவுகின்றன. நிலத்தடி நீர்வளம் பெருகவும் மண் அரிப்பைத் தடுக்கவும் தாவரங்கள் பெரிதும் பயன்படுகின்றன. தூய்மையான காற்றே உயிர்களின் நல்வாழ்வுக்குச் சிறந்த துணையாகும்.

வினாக்கள் :-

1.' பஞ்சபூதம் ' என்பன யாவை ?

2. காற்று எவ்வாறு மாசடைகிறது ?

3. சூரியக் குடும்பத்தின் உயிர்க்கோள் எது ? ஏன் ?

4. காடுகளின் பயன்கள் யாவை ?

5. அ. சுவாசித்தலுக்குத் தேவையானது ____________

1. தூய மனம் 2. தூய காற்று 3. தூய ஆடை

ஆ.ஒளிச்சேர்க்கை மூலம் நாம் இதனைப் பெறுகிறோம்

1.உயிர்வளி 2.கரியமில வாயு 3.நல்ல உணவு

**ஆ.கீழ்க்காணும் தலைப்பிலுள்ள கட்டுரைகளில் ஒன்றை மட்டும் எழுதுக :-** 10

1.நூல் நிலையம்

2.பொங்கல் திருநாள்

**இ.பின்வரும் தலைப்புகளில் உள்ள கடிதங்களில் ஒன்றை மட்டும் எழுதுக :-** 8

1.குடிநீர் வசதி வேண்டி பஞ்சாயத்துத் தலைவருக்குக் கடிதம் எழுதுக.

2.விடுமுறையைக் கழிக்க வருமாறு தோழன் / தோழிக்குக் கடிதம் எழுதுக.

## பகுதி- 2

**இலக்கணம் :-** 15

**அ.பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.தொழிற்பெயர்

அ.கருங்குயில் ஆ.மதுரை இ.இலை ஈ.பாடினான்

2.வினை மரபுச்சொல்

அ.புறா குனுகும் ஆ.தென்னம்பிள்ளை இ.கூரை வேய் ஈ.ஈச்ச ஓலை

3.முற்றுப்போலி

அ.பந்தர் ஆ.அஞ்சு இ.மையல் ஈ.இலைஞ்சி

**ஆ.தகுந்த விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

4.ஈற்றுப்போலி என அழைக்கப்படுவது ____________ ஆகும்.

அ.பெயர்ச்சொல் ஆ.முதற்போலி இ.இடைப்போலி ஈ.இறுதிப்போலி

5.மரபுச்சொற்களைத் தவிர்த்து பிற சொற்களைப் பயன்படுத்துதல் ____________ எனப்படும்.

அ.பெயர்ச்சொல் ஆ.மரபுவழு இ.பிறமொழிச்சொல் ஈ.போலி

6. இங்கிலாந்து என்பது ____________

அ. பண்புப்பெயர் ஆ. பொருட்பெயர் இ. இடப்பெயர் ஈ. காலப்பெயர்

**இ. அடைப்புக்குள் கூறியவாறு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

7. தைப்பொங்கல் (காலப்பெயரை எடுத்து எழுதுக)

அ. தை ஆ. பொங்கல் இ. இனிப்பு ஈ. உணவு

8. கிளி கூவும் (மரபுவழு நீக்கி எழுதுக)

அ. கிளி பாடும் ஆ. கிளி கொஞ்சும் இ. கிளி பேசும் ஈ. கிளி அகவும்

9. வெண்ணிலா (பண்புப்பெயரை எடுத்து எழுதுக)

அ. வெண்மை ஆ. நிலா இ. பிறை ஈ. மதி

**ஈ. தகுந்த இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

10. பந்தர்

அ. முதற்போலி ஆ. இடைப்போலி இ. கடைப்போலி ஈ. முற்றுப்போலி

11. புறகணிப்பு

அ. பிறமொழிச்சொல் ஆ. தமிழ்ச்சொல் இ. ஆங்கிலச்சொல் ஈ. மரபுவழு

12. கபாலம்

அ. சினைப்பெயர் ஆ. காலப்பெயர் இ. பண்புப்பெயர் ஈ. தொழிற்பெயர்

**உ. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

13. அ. முன்றில் - முதற்போலி

ஆ. முன்றில் - இடைப்போலி

இ. முன்றில் - இறுதிப்போலி

ஈ. முன்றில் - முன்பின்னாகத்தொக்க போலி

14. அ. பெயர்ச்சொல் இரண்டு வகைப்படும்

ஆ. பெயாச்சொல் மூன்று வகைப்படும்

இ. பெயர்ச்சொல் ஐந்து வகைப்படும்

ஈ. பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்

15. அ. நெற்றாள் - பிறமொழிச்சொல்

ஆ. நெற்றாள் - மரபுச்சொல்

இ. நெற்றாள் - மரபுவழு

ஈ. நெற்றாள் - போலி

## பகுதி- 3

**அ. பொருள் கூறுக :-** 3 x 1 = 3

1. துயர்உறா 2. நெஞ்சுரம் 3. எள்ளாமை

**ஆ. எதிர்ச்சொல் எழுதுக :-** 3 x 1 = 3

1. விழிப்பு 2. கவலை 3. நல்வழி

**இ. பிரித்து எழுதுக :-** 3 x 1 = 3

1. சிற்றுளி 2. உடற்பருமன் 3. விழிப்புணர்வு

**ஈ. கோடிட்ட இடத்தை நிரப்புக :-** 3 x 1 = 3

1. பாரதிதாசன் குடியிருப்பில் ______________ நடைபெற்றது.

2. சோழநாடு ___________ , __________ என பிரிக்கப்பட்டு இருந்தது.

<u>உ. சொற்றொடர் அமைக்க :-</u> 1 x 2 = 2

விழிப்புணர்வு <u>அல்லது</u> பாராட்டு

<u>ஊ. உயிரெழுத்தில் ஓர் எழுத்து ஒரு மொழி எழுதுக :-</u> 2 x 1 = 2

1. ஏ - 2. ஐ -

## <u>பகுதி- 4</u>

<u>அ. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u>

கொற்றவனே! என் செய்தனை ! இளந்தத்தனாரை ஒற்றர் எனக் கருதிச் சிறையிட்டனையே ! இஃது உமது குடிபிறப்புக்கு ஏற்றதன்று. புலவர்கள் , பழமரத்தை நாடிச் செல்லும் பறவைகள் போல , நாளும் வள்ளல்களை நாடிச் சென்று பாடிபரிசில் பெறுவர். அதனை தாம் மட்டும் துய்க்காது , உற்றார் உறவினர் மற்றும் வறியோர் , எளியோர்க்கும் வழங்கி மகிழ்வர். அவர்கள் எந்நாட்டிற்கும் சொந்தமானவர்கள். அறிவுரை கூறுதலும் , அறங்காத்தலும் புலவர்களின் தொழில் என்பதனையும் மறந்தனையோ ?

<u>வினாக்கள் :-</u> 5 x 1 = 5

1. மேலே கூறப்பட்ட இக்கூற்று யாரால் சொல்லப்பட்டது ?

அ. இளந்தத்தனார் ஆ. கோவூர்கிழார் இ. நலங்கிள்ளி

2. இளந்தத்தனார் மீது இக்குற்றம் சாற்றப்பட்டது .

அ. பகைவர் ஆ. படைவீரர் இ. ஒற்றர்

3. கொற்றவன் என்பதன் பொருள் ____________

அ. தொழிலாளி ஆ. அரசன் இ. காவலாளி

4. வள்ளல்களை நாடிச்சென்று பாடிபரிசில் பெறுபவர் யார் ?

அ. நலங்கிள்ளி ஆ. நெடுங்கிள்ளி இ. இளந்தத்தனார்

5. இது புலவர்களின் தொழில் - ______________

அ. ஆடலும் பாடலும்

ஆ. ஆக்கலும் அழித்தலும்

இ. அறிவுரை கூறுதலும் அறங்காத்தலும்

## ஆ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :- 3 x 1 = 3

1. ஞாலம் என்பதன் பொருள் ______________

அ. அறிவு  ஆ. அறம்  இ. உலகம்

2. கவளம் என்பது ________________

அ. பொரி உருண்டை  ஆ. சோற்று உருண்டை  இ. உலக உருண்டை

3. முடக்கற்றான் கீரை இந்நோயைக் குணப்படுத்தும் ______________

அ. வாத நோய்  ஆ. கண் நோய்  இ. இதய நோய்

## இ. எவையேனும் நான்கனுக்கு குறுகிய விடையளி :- 4 x 2= 8

1. ஒரு செயலில் ஈடுபடுபவர் எவற்றைப் பொருட்படுத்த மாட்டார் ?

2. ஒருவரின் உருவத்தைக் கண்டு இகழக் கூடாது. ஏன் ?

3. கீரையை உண்பதால் ஏற்படும் பயன்கள் யாவை ?

4. புலவர்கள் வாழ்க்கையைப் பற்றிக் கோவூர்கிழார் கூறியவை யாவை ?

5. கம்பரிசியால் சமைக்கப்படும் உணவுகள் யாவை ?

6. போரை நிறுத்தக் கோவூர்கிழார் கூறிய காரணம் என்ன ?

## ஈ. அடிமாறாமல் எழுதுக :- 4+2+2= 8

1. ' முற்றும் ' - எனத் தொடங்கும் நீதிநெறி விளக்கப்பாடலை எழுதுக.

2. ' உருவு ' - எனத் தொடங்கும் குறளை எழுதுக.

3. ' அரிது ' - என முடியும் குறளை எழுதுக.

## உ. கீழ் வரும் துணைப்பாடக் கட்டுரையை எழுதுக. 1 x 8 = 8

விகடகவி தெனாலிராமன் செய்த நகைச்சுவை.